ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1906/8 - 2015 මාර්තු මස 17 වැනි අඟහරුවාදා - 2015.03.17

1906/8 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.21/1978 (xi)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 91 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2015, மாச்சு 11.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சகாய நிதியக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2015.03.11 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டத்தின் 90 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகங்கள் சகாய நிதியத்தின் ஒழுங்குப்படுத்துகை, நிருவாகம் மற்றும் முகாமை என்பவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் I

நிதியத்தின் உறுப்பாண்மை

3. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டத்தின் 92 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர்களாக வந்துள்ள அல்லது இனி வருகின்ற, ஆணைக்குழுவின் அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவர் ஒவ்வொருவரும், சட்டத்தின் 92(1) என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் மற்றும் தொகையிலும் நிதியத்திற்கு உதவுதொகைகளைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், எந்த உயர் கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளதோ அந்த உயர் கல்வி நிறுவனம் அல்லது ஆணைக்குழு அதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகையிலான உதவுதொகையைச் செலுத்துதலும் வேண்டும்.